மாவட்ட உரிமையியல் மற்றம் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

அசல் வழக்கு எண்.193/2021

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.கலைச்செல்வி, கிரேடு III என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : மலைப்பாண்டியன் (சொட்டமுறி கிராம நிர்வாக அலுவலர்) (வா.சா.2)<br>த/பெ.க/பெ : நாகராஜன்<br>கிராமம் :<br>தாலுகா : | சாதி :<br>மதம் :<br>தொழில் :<br>வயது : |

10.01.2024

## முதல் விசாரணை –

1. நான் சொட்டமுறி கிராம நிர்வாக அலுவலராக கூடுதல் பொறுப்பு 4 மாதங்களாக கவனித்து வருகிறேன். அழைப்பாணையில் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். தாவா 1வது லக்க சொத்தான பட்டா எண் 97ல் சர்வே எண் 125/6 சுப்பையா சேர்வை மகன் கருப்பசாமி பெயரில் அ பதிவேடு உள்ளது அந்த பதிவேடு உண்மை நகல் சாசாஆ1 ஆகும். தாவா 1வது லக்க சொத்தான பட்டா எண் 97ல் சர்வே எண் 125/6 சுப்பையா சேர்வை மகன் கருப்பசாமி பெயரில் 10(1) உள்ளது அந்த 10(1) உண்மை நகல் சாசாஆ2 ஆகும். DPT 191/2008 நாள் 22.03.2008ன் பிரகாரம் மேற்படி பட்டா எண் 97 ஆனது ரவிந்திரகுமார் மனைவி பிரமிளா பெயரில் பட்டா எண் 418 ஏற்பட்டுள்ளது. அந்த 10(1) பட்டா உண்மை நகல் சாசாஆ3ஆகும். DPT 5682/2013 நாள் 06.02.2014ன் பிரகாரம் மேற்படி பட்டா எண் 418 ஆனது கருப்பசாமி மனைவி இருளாயி பெயரில் கூட்டுப் பட்டா எண் 508 ஏற்பட்டுள்ளது. அந்த 10(1) பட்டா உண்மை நகல் சாசாஆ 4 ஆகும்.

DR 2016/103/26/013/203 TR நாள் 11.11.2016 பிரகாரம் மேற்படி பட்டா எண் 508 ஆனது கருப்பசாமி மனைவி இருளாயி பெயரில் தனிப்பட்டா எண் 560 ஏற்பட்டுள்ளது. அந்த 10(1) பட்டா உண்மை நகல் சாசாஆ 5ஆகும். சர்வே எண்

125/6 இருளாயி பெயரில் உள்ள அடங்கல் கணக்கு சாசாஆ 6 ஆகும். சர்வே எண் 125 ற்குண்டான புல வரைபடம் உண்மை நகல் சாசாஆ 7 ஆகும்.

2. தாவா 2 வது லக்க சொத்தான பட்டா எண் 97, சர்வே எண் 114/3 ற்குண்டான அ பதிவேடு உண்மை நகல் சாசாஆ 8 ஆகும். மேற்படி சர்வே எண் கருப்பசாமி பெயரில் உள்ளது. மேற்படி பட்டா எண் 97, சர்வே எண் 114/3 ஆனது DPT எண் 1404/2010 நாள் 15.09.2010 ன் படி பட்டா எண் 447 சென்னை R & A பிசினஸ் வென்சர்ஸ் பிரைவேட் லிமிடெட் பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது அது சாசாஆ 9 ஆகும். சர்வே எண் 114/3 ற்குண்டான அடங்கல் கணக்கு உண்மை நகல் சாசாஆ 10 ஆகும். சர்வே எண் 114 ற்குண்டான புல வரைபடம் உண்மை நகல் சாசாஆ 11 ஆகும்.

2, 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –

3. பொதுவாக பட்டா ஒருவர் பெயரில் இருந்து மற்றொருவருக்கு பட்டா மாற்றம் செய்யும்போது முறையான பத்திரத்தின் அடிப்படையில் மாற்றம் செய்யப்படும் என்றால் சரிதான். தாவா சொத்திற்கும் முறையான பத்திரத்தின் அடிப்படையில் மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

6, 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.